# மாநில அளவிலான பயிலரங்கு

12.03.2019 அன்று ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரித் தமிழ்த்துறையின் சார்பில் மாநில அளவிலான கவிதை- நாடகம் - சிறுகதை ஆக்கப் பயிலரங்கு நடைபெற்றது. பயிலரங்கில் பல்வேறு பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவிகள், பேராசிரியர்கள் 148 பேர் கலந்துகொண்டனர். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் திருமதி. ஆ.உஷா அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். முதலாமாண்டு மாணவிகள் செல்வி. ஜெ. ராஜ சந்தியா மற்றும் செல்வி. எஸ். இசக்கி முத்துமாரி ஆகிய இருவரும் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்கள்.

பயிலரங்கு ஒரேநேரத்தில் மூன்றுஅமர்வுகளாக நடைபெற்றது.முதல்அமர்வில்திண்டுக்கல் , அய்யம்பாளையத்தைச் சேர்ந்த,ஸ்ரீ சக்தி சமூக, பொருளாதார, கல்வி நலன் அறக்கட்டளை நிர்வாகி, திருமதி.சக்தி ஜோதி அவர்கள் கவிதை எழுதும்முறை குறித்துப் பயிற்சி அளித்தார்கள். இரண்டாவது அமர்வில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் தமிழியல்துறைத் தலைவர், பேராசிரியர்.முனைவர்.அ.இராமசாமி அவர்கள் நாடகம் எழுதும்முறை,நடிக்கும்விதம் ஆகியன குறித்துப் பயிற்சியளித்தார்கள்.மூன்றாவது அமர்வில் மதுரை கூழாங்கற்கள் இலக்கிய அமைப்பின் உறுப்பினர், திருமதி.தீபா நாகராணி அவர்கள் சிறுகதை குறித்துப் பயிற்சி அளித்தார்கள்.

பயிற்சியின் முடிவில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் தங்கள் படைப்புகளை அரங்கேற்றினார்கள்.தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் திருமதி.ஆ.உஷா அவர்கள்,அவற்றில் சிறந்த மூன்று படைப்புகளுக்குப் பரிசாகக் கேடயங்களை அன்பளிப்பாக வழங்கினார்கள். இந்தப் பயிலரங்கு, வளரும் தலைமுறையினர் புத்திலக்கியங்களைப் படைக்க மிகுந்த பயன் அளிப்பதாக இருந்ததாகப் பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் கருத்துரை வழங்கினர். பின்னர் பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தமிழ்த்துறையின் பொதிகை இலக்கியமன்றச் செயலர் செல்வி. ஆ. அருள் விநாயகமாலதி பயிலரங்கு நிகழ்வு குறித்த அறிக்கையை வாசித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.